Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 342

செவ்வாய்க்கிழமை
04 நவம்பர் 2025

ஐப்பசி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## செல்வம் எம்.பி.யின் வாகனத்தில் திடீர் தீ

வவுனியா, நவ. 4
நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்குச் சொந்தமான வாகனத்தில் திடீர் தீப் பரவல் ஏற்பட்டுள் 11



செம்மணிப் புதைகுழிக்குள் மழைநீர் தேக்கம்

# மூன்றாம்கட்ட அகழ்வுகள் அடுத்த வருடமே ஆரம்பம்

### கள ஆய்வின் பின்னர் முடிவு

**யாழ்ப்பாணம், நவம்பர் 4**
**செம்மணி மனிதப் புதைகுழிக்குள் மழைநீர் தேங்கி நிற்பதால், மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளை அடுத்த வருடத்தில் ஆரம்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.** 11

*காரைநகர், சண்டிலிப்பாய்*

## ஒருங்கிணைப்புத் தலைவராக ஸ்ரீபவானந்தராஜா நியமனம்!



யாழ்ப்பாணம், நவ. 4
காரைநகர் மற்றும் சண்டிலிப்பாய்ப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா நியமிக்கப்பட்டுள்ளார். 11

*யாழ்ப்பாணத்தில்*

## தமிழ்மக்கள் கூட்டணியின் தலைமைச்செயலகம் திறப்பு!

யாழ்ப்பாணம், நவ. 4
தமிழ்மக்கள் கூட்டணியின் தலைமைச் செயலகத் திறப்பு விழா யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. தமிழ்மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு 11



## இளைஞர்களை இலக்குவைத்து போதைமாத்திரைகள் விற்பனை

### சந்தேகநபர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 4
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் இளைஞர்களை இலக்குவைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்யும் குழுவைச் சேர்ந்த இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்ட குற்றத் 11

செம்மணியில் இருந்து மீட்கப்பட்ட

## 239 என்புத் தொகுதிகளையும் ஆராய பட்ஜெட் முன்வைப்பு!

யாழ்ப்பாணம், நவ. 4
செம்மணிப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட 239 என்புத் தொகுதிகளையும் ஆராய்வதற்கான பட்ஜெட் சட்ட மருத்துவ அதிகாரியால் 11

## செம்மணியில் மீட்கப்பட்ட காலணி 1995ஆம் ஆண்டுக்கு முற்பட்டதே

யாழ்ப்பாணம், நவ. 4
செம்மணிப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட காலணி, 1995ஆம் ஆண்டுக்கு முற்பட்டது எனக் கண்டறியப்பட்டுள்ளதாக சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்துள் 11



## கள்ளமண் கடத்தியவரின் காலில் பாய்ந்த தோட்டா



யாழ்ப்பாணம், நவ. 4
யாழ்ப்பாணம் பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், மணல் கடத்தலில் ஈடுபட்ட 'பொலிரோ' ரக வாகனமொன்றை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைப்பற்றியிருந்த நிலையில், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டே அந்த வாகனம் கைப்பற்றப்பட்டதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. இதன்போது நபரொருவர் காலில் 11

*அத்துமீறி மீன்பிடித்த*

## இந்திய மீனவர்கள் 31 பேர் நேற்று அதிகாலை கைது!

### காரைநகர் கடற்பரப்பில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 4
யாழ்ப்பாணம் - காரைநகர் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 31 பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர். 11

### முச்சந்தி முரளி

'ஐஸ் விக்கிறவைக்கு இப்ப நல்லா குளிர்விட்டுப் போச்சுது கண்டியளோ'

## ஐஸ் போதைப்பொருளுடன் ஆறு சந்தேகநபர்கள் கைது

### அவர்களில் ஒருவர் வழிப்பறிச் சந்தேகநபர்

யாழ்ப்பாணம், நவ. 4
யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக வழிப்பறி மற்றும் கொள்ளைகளில் ஈடுபட்ட சந்தேகநபர் உட்பட ஆறு பேர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள் 11

## ஹெரோய்னுடன் பெண் கைது

யாழ்ப்பாணம், நவ. 4
ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த பெண்ணொருவர் யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் 11

## இந்திய மீனவர்களை உடன் விடுவியுங்கள்

### இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 4
காரைநகர் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் அனைவரையும் உடனடியாக விடுவிப்பதற்கு 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 03.11.2025 | 4244 | R | 12 46 54 73 | விசேட எழுத்து R |
| ஹந்தஹண ராசி சுப பலன் | 03.11.2025 | 1311 | | 10 22 24 35 | வெற்றி இலக்கினம் கும்பம் |
| NLB ஜய | 03.11.2025 | 0270 | C | 5 5 8 6 | |
| மெகா பவர் | 03.10.2025 | 2350 | L | 11 48 49 65 | சுப்பர் இலக்கம் 13 |
| மஹஜன சம்பத | 03.11.2025 | 6002 | D | 4 3 3 7 7 5 | |
| தன நிதானய | 03.11.2025 | 2032 | C | 40 42 57 58 | விசேட எழுத்து C |
| அத சம்பத | 03.11.2025 | 0577 | D | 3 7 5 7 | |
| சுப தவசக் | 03.11.2025 | 0118 | | 07 58 59 | வெற்றி இலக்கினம் கடகம் |

# மஹாபொல நிதிமுறைகேடு விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, நவ.4

**மஹாபொல புலமைப்பரிசில் நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு தண்டனை பெற்று தற்போது சிறையில் உள்ள முன்னாள் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவின் காலத்தில் இந்த நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறையில் உள்ள முன்னாள் அமைச்சரிடமிருந்து வாக்குமூலம் பதிவுசெய்வதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுதிட்டமிட்டுள்ளது. ஆயினும் அவர் தனது வழக்கறிஞர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே ஆணைக்குழுவிடம் வாக்குமூலம் அளிக்க முடியும் என்று அறிவித்துள்ளார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு நீதிமன்ற உத்தரவைப் பெற்று அமைச்சரிடத்தில் வாக்குமூலத்தைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மஹாபொல புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதிச்சட்டத்தின் படி, நிதி தொடர்பான முடிவுகள் அந்தப் புலமைப்பரிசில் திட்டத் தலைவருடன் கலந்தாலோசித்து எடுக்கப்படவேண்டும். ஆயினும் அப்போது பதவியில் இருந்த தலைவருடன் கலந்தாலோசிக்காமல் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 03.11.2025 | திங்கட்கிழமை | 0710 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| F | 1 0 9 5 7 3 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.11.2025 | திங்கட்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2976 | R | 24 26 32 62 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.11.2025 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 28 31 73 76 | 5137 |

| SASIRI | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.11.2025 | திங்கட்கிழமை | |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | |
| 0806 | 13 29 35 | |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.11.2025 | திங்கட்கிழமை | |
| மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 51 53 56 57 | 4688 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 03.11.2025 | திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| T | 09 | 13 16 20 45 | 2152 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.11.2025 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 26 60 65 75 | 2802 |

# இந்தியாவுக்கு சஜித் பயணம்

கொழும்பு, ஒக்.4

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று இந்தியாவுக்குப் புறப்பட்டார்.

இந்தப் பயணத்தின்போது, அவர் பல அரசு அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்திப்பார் என்றும், பல நிகழ்வுகளில் கலந்துகொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)

# பாடசாலை நேர நீடிப்பு பொருத்தமற்ற முடிவு!

## அதிபர்கள் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, நவ.4

பாடசாலை நேர நீடிப்பு தீர்மானம் ஒரு பொருத்தமற்ற முடிவு. உரிய கலந்தாலோசனை செய்து தீர்மானம் எடுக்காதுவிட்டால், எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளநேரிடும் என்று தரப்படுத்தப்பட்ட அதிபர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் நிமல் முதுன்கொட்டுவ தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது காலை 7.30 முதல் பி.ப. 1.30 மணிவரை இருக்கும் பாடசாலை நேரத்தை 2 மணி வரை நீடிப்பதால், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் மன ஒருமைப்பாட்டை பேணுவது கடினமாகிவிடும். இதனால் எந்தவொரு நன்மையும் ஏற்படாது. மாறாகப் பாதகமான நிலையே உருவாகும்.

அதிபர்கள் காலை 7.30 முதல் பி.ப. 7.30 மணிவரை (10 மணி நேரத்துக்கும் மேல்) நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அரை மணிநேரம் பாடசாலை நேரத்தை நீடிப்பதன் மூலம், அதிபர்களின் கண்காணிப்புப் பொறுப்பு மேலும் அதிகரிக்கப்படுகிறது. நீடிக்கப்பட்ட அந்த அரைமணி நேரத்தில், கல்வி நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது 20 நிமிடங்கள் மட்டுமே.

மீதி 10 நிமிடங்கள் அர்த்தமற்ற ஒரு இடைவேளைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது பகல் நேரத்தில் மாணவர்களைப் பாடசாலையில் தேவையற்ற தக்கவைப்பு என்பதுடன், கல்விப் பணிகளுக்கும் உதவாது. பாடசாலை நேரநீடிப்பு குறித்த எங்கள் எதிர்ப்பைக் கல்வி அமைச்சுக்கு எழுத்துமூலம் தெளிவாகத் தெரிவித்துள்ளோம் - என்றார். (ச-இ)

# குஷ் போதையுடன் இளைஞர் கைது!

21 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட 'குஷ்' போதைப் பொருள் தொகையுடன் இலங்கையர் ஒருவரை சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் தாய்லாந்தின் பாங்கொக்கிலிருந்து நாட்டுக்கு வந்தபோது கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 2.7 கிலோகிராம் குஷ் போதைப் பொருளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் 28 வயதானவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ஐவரின் திட்டத்துக்கமையவே கணேமுல்ல சஞ்சீவ கொலை!

## விசாரணைகளில் தகவல்



கொழும்பு,நவ.4

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழு உறுப்பினரான கணேமுல்ல சஞ்சீவவின் கொலை, ஐவரின் திட்டத்துக்கமைய இடம்பெற்றுள்ளமை விசாரணைகளில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட சந்தேகநபர்களிடம் நடத்தப்பட்ட நீண்ட விசாரணைகளில் இந்தத் தகவல் வெளிக்கொணரப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கெஹெல்பத்தர பத்மே, கொமாண்டோ சலிந்த, தருண், இஷாரா செவ்வந்தி மற்றும் துப்பாக்கிதாரியாகச் செயற்பட்ட சமிந்து டில்ஷான் ஆகியோர் இந்தக் கொலையைத் திட்டமிட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்தின் 5ஆம் இலக்க அறைக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்டிருந்தார். (க-இ)

# பாடசாலை நேர நீடிப்பில் எவ்வித சிக்கலும் இல்லை

## கல்வி அமைச்சர் ஹரிணி தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ.4

பாடசாலை நேரத்தை பிற்பகல் இரண்டு மணி வரை நீடிப்பதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என்று பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பிற்பகல் இரண்டு மணிவரை பாடசாலை நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் சாதகமான பதில்களே அதிகமாகக் கிடைத்துள்ளன - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பாண்டில் அரசுக்கு ரூ. 2,321.7 பில். வருமானம்

**கொழும்பு, நவ.4**

**2025 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் அன்பளிப்புகள் நீங்கலாக அரசாங்கத்தின் மொத்த வருமானம் 2,321.7 பில்லியன் ரூபா என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது.**

2024ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 1,860.6 பில்லியனாக இருந்த அரச வருமானம், 2025ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 24.8 சதவீதம் அதிகரித்து 2,321.7 பில்லியன் ரூபாவை எட்டியுள்ளது. இந்த அரச வருமான உயர்வுக்கு வரி வருமானம் பிரதான பங்களிப்பை வழங்கியுள்ளது. 2025ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் வரி வருமானம் 2,151.1 பில்லியன் ரூபாவாக 25.9 சதவீதம் அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் 1,70 9.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டுள்ளது. இந்த வரி வருமான அதிகரிப்புக்கு மோட்டார் வாகனங்களுக்கான உற்பத்தி வரி வருமானம், பெறுமதிசேர் வரி வருமானம், சுங்க இறக்குமதி வரிகள், வருமான வரி, விசேட வணிகப் பொருள்கள் மீதான வரிகள், சமூகப் பாதுகாப்பு வரிகள், பெற்றோலியப் பொருள்கள்மூலம் கிடைத்த வரிகள், மதுவரி வருமானம், மற்றும் செஸ் வரி போன்ற பல காரணிகள் முக்கியமாகப் பங்களித்துள்ளன என்றும் நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## உள்ளூர்ப் பழச்சாறுகளுக்கு தரச்சான்றிதழ் கட்டாயம்

கொழும்பு, நவ.4

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும், உடனடியாகப் பருகக்கூடிய அனைத்துப் பழச்சாறுகளும் கட்டாயமாக இலங்கைத் தரச்சான்றிதழ் முத்திரையுடன் இருக்கவேண்டும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

அதேவகையைச் சேர்ந்த இறக்குமதி செய்யப்பட்ட பழச்சாறுகள், விற்பனைக்கு வருவதற்கு முன்னர், இறக்குமதி பரிசோதனைத் திட்டத்தின்கீழ் முன் அனுமதி பெறவேண்டியது அவசியம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த விதிமுறை, தேசிய உணவு மற்றும் பானத் தரச்சான்றிதழ் தேவைகளுக்கு இணங்க, நுகர்வோருக்கான தயாரிப்புப் பாதுகாப்புத் தரத்தையும் உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டதாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கெஹெலிய குடும்பத்தின் 3 மனுக்கள் நிராகரிப்பு

கொழும்பு, நவ.4

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின், குடும்ப உறுப்பினருக்குச் சொந்தமான வங்கிக்கணக்குகள் மற்றும் சொத்துகளைச் செயற்படுத்துவதற்குத் தடை விதித்து, கொழும்பு மேல் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவைச் செல்லுபடியற்றதாக்கக் கோரி தாக்கல்செய்யப்பட்ட, மூன்று மனுக்களை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கெஹெலிய ரம்புக்வெலவின் குடும்ப உறுப்பினர்களால் இந்த மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, உயர்நீதிமன்ற நீதவான் ஜனக் டி சில்வா மனுக்களை நிராகரித்து உத்தரவிட்டார். (க-இ)

## நீதித்துறை அதிகாரிகள் 20 பேர் பணியிடை நீக்கம்!

கொழும்பு, நவ.4

நீதிபதிகள் மற்றும் நீதிச்சேவை அதிகாரிகளில் 20 பேர் தமது கடமைகளில் இருந்து பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி, நீதவான்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகள் ஆகியோரும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. கடமைகளில் இருந்து நீக்கப்பட்ட 20 பேரில் ஏழு பேரின் சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், ஏனையவர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் அல்லது கட்டாய ஓய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். நீதிச்சேவையில் உள்ளவர்கள் தொடர்பாகப் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நீதிச்சேவை ஆணைக்குழு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. ஊழல் போன்ற தீவிரமான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டவர்களுக்கு எதிராகவும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## விவசாய மானியக் கொடுப்பனவை பயன்படுத்தாவிடில் இனித் தண்டம்

கொழும்பு, நவ.4

நாட்டில் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் வழங்கப்படும் உதவிக்கொடுப்பனவுகளைப் பயன்படுத்தாத விவசாயிகளுக்கு இனிவருங்காலங்களில் மேலதிக கொடுப்பனவுகளை வழங்காதிருக்கவும், தண்டம் விதிக்கவும் விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

விவசாய மானியத்திட்டத்தில் விவசாயிகளின் பொறுப்புக்கூறலை வலுப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் இந்தப் புதிய கொள்கையை முன்னெடுக்கவுள்ளது என்று விவசாயப் பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

பொதுநிதியைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கும், மானிய உதவியின்கீழ் நேரடியாக விவசாய உற்பத்திகளை உறுதிசெய்வதற்குமாக அரசாங்கம் முக்கியமான கொள்கைத் தீர்மானத்தை முன்னெடுத்துள்ளது. அடுத்த பயிர்ச்செய்கைக்கான பருவகாலத்திலிருந்து திருத்தப்பட்ட கொள்கையை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மானியத்தின் ஒரு பகுதியை பயிர்ச்செய்கைக்கு முன்னதாகவே பெறுகின்றனர். எனினும் விவசாயிகளில் சிலர் பயிர்ச்செய்கையை முன்னெடுப்பதில்லை. இது மோசடியாகும். இதைத் தடுப்பதற்கு மானியத்தொகையின் முதல் கொடுப்பனவைப் பெற்று பயிர்ச்செய்கைகளை முன்னெடுக்காதவர்களுக்கு எதிராகத் தண்டம் விதிக்கும் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றத்தை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு மீதமுள்ள கொடுப்பனவை அரசாங்கம் நிறுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




## நெல்லைவிட பதர்களுக்குத்தான் மவுசு

கற்றோருக்குச்சென்ற இடமெல்லாம் மதிப்பெண்ட காலம் மலையேறிப்போட்டுது. இப்ப கைநிறையக் காசுள்ளவைக்கும், சோசியல் மீடியாவில பேமஸான வைக்கும் மட்டும் தான் சென்ற இடமெல்லாம் மதிப்பாக் கிடக்குது. இப்பிடியான சோசியல் மீடியாவில பேமஸானவையையும், காசை விசுக்கிறவையையும் விருந்தினராக் கூப்பிட்டு,அவையள் உரை எண்ட பேரில தங்களைத் தாங்களே பெரியாளாக்க வெளிக்கிடுற வெருளிக்கூத்துகளைக் காணவேண்டிய கட்டாயம் கலியுகத்தில எங்களுக்கு வரமா வாய்ச்சிருக்குது.

கிட்டடியில கஞ்சா கடத்தினதெண்டு ஒருத்தரைப் பொலிஸ் பிடிச்சது. அப்பிடிப் பொலிஸ் பிடிக்கமுதலே ஆள் இந்தவேலை செய்துதான் கைநிறைய மோதிரங்களும், கழுத்து நிறையச் சங்கிலியளும் போட்டிருக்கிறார் எண்டது உலகத்துக்கே தெரியும். அதெல்லாம் தெரிஞ்சிருந்தும் கூட, சில பள்ளிக்கூடங்களும், வாசிகசாலையளும் தங்கட நிகழ்வுகளுக்கு அந்தக் 'கஞ்சா கடத்தியைத்தான்' கூப்பிடுறவை. அவரைக் கூப்பிட்டால், பள்ளிக்கூடத்துக்கோ இல்லாட்டி வாசிகசாலைக்கோ ஏதும் நிதியுதவி செய்வார். அதுக்காக விருந்தினர் எண்டு ஐஸ் வைச்சுக் கூப்பிட்டு,காசு பாக்கிறவேலையளை உந்த அமைப்புகள், பள்ளிக்கூடங்கள் செய்தவை. 'கஞ்சா கடத்தியும்' , இதுதான் சான்ஸ் எண்டு தன்னை ஊரிலை ஒரு பெரியாளாக் காட்ட வெளிக்கிட்டார். அப்பிடியே இந்தச் சமூகசேவையளும் செய்து, அதைப் பப்ளிக் பண்ணி தன்னை ஒரு கொடைவள்ளலா டெவலப் பண்ணி, பிறகு தன்ர சார்பில கொஞ்சப்பேரை உள்ளூராட்சி எலக்சனிலையும் நிக்கவைச்சு, நாலைஞ்சு சீற்றும் எடுத்தவர். அதுக்குப் பிறகு ஆற்றையோ கண்பட்டதால, காருக்குள்ள கஞ்சாவோட ஆள் பிடிபட்டவர். அதுவரைக்கும் உப்பிடியான விழாக்களுக்கு விருந்தினராப் போய், மாலைமரியாதை வாங்கிறதைத்தான் அவர் முழுநேரத் தொழிலா வைச்சிருந்தவர்.

அவர் மட்டுமில்ல, யூரியூப்பில கண்றாவியான வீடியோக்கள் போடுறவையைக்கூட சில அமைப்புகள் தங்கட நிகழ்ச்சியளுக்கு விருந்தினராக் கூப்பிட வெளிக்கிட்டினம். ஆயிரக்கணக்கான ஆக்கள் 'சப்ஸ்கிரைப்' பண்ணியிருக்கிறது மட்டும் தான் அந்த யூரியூப் காரருக்கு இருக்கிற ஒரேயொரு தகுதி. இப்பிடி ஆயிரக்கணக்கானவைக்குத் தெரிஞ்ச ஒருத்தரை தங்கட நிகழ்ச்சியளுக்குக் கூப்பிடுறதை சில பள்ளிக்கூடகாரர் பெருமையா நினைக்கினம். மற்ற அமைப்புகள் ஆரையும் விருந்தினராக் கூப்பிடட்டும், அது பிரச்சினையில்லை. ஆனால் பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு இப்பிடி கஞ்சா கடத்திறவையையும், கள்ளக்காணி எழுதுறவையையும், களவெடுக்கிறவையும், மற்றவையை ஏமாத்தி தங்கட வசதி வாய்ப்புக்காக அவையின்ர சொத்தை வறுகினவையையும் விருந்தினராக் கூப்பிட்டால், பிள்ளையள் என்ன நினைக்கும்? 'இப்பிடிச் சமூகத்தை தட்டிச் சுத்திப்பிழைச்சாத்தான் பெரியாள் ஆகலாம்'எண்டு அந்தப் பிஞ்சுகள் நினைச்சால், பிறகு எங்கட அடுத்த தலைமுறை தறிகெட்ட தலைமுறையாத்தான் மாறும். விருந்தினராக் கூப்பிடுறதுக்கு நல்லது செய்து போட்டு அமைதியா இருக்கிற எத்தினையோ பேர் இருக்கினம். அப்பிடியான நல்லவையை விட்டிட்டு இப்பிடிக் களைமாதிரி இருக்கிறவையைத்தான் விருந்தினராக் கூப்பிடவேணும் எண்டு பள்ளிக்கூடங்கள் ஒற்றைக்காலில நிக்கிறது ஏனெண்டு விளங்கேலை கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்குத் திடீர்ப்பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்கவும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். உறவினர்கள்மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச்செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாகமுடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:**இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். உறவினர்கள்மூலம் கிடைக்கும் தகவல் மகிழ்ச்சிதரும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**துலாம்:** உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்புத் தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் நண்பர்கள்மூலம் எதிர்பாராத ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் பரபரப்பாகச் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொண்டாலும் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். ஆனால், திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரையும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது நல்லது. வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. மாலையில் சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**கும்பம்:** சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச்செய்யவேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள்வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சிதரும்.

# வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அலங்கார மீன் உற்பத்தி மேம்பாடு

## துறைசார் நிபுணர்களுடன் கடற்றொழில் அமைச்சர் ஆராய்வு

கொழும்பு, நவ.4

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அலங்கார மீன் உற்பத்தித் தொழிற்றுறையை ஆரம்பித்து அதை நிலைநிறுத்துவதற்கான சாத்தியக்கூறுகள், சவால்கள் மற்றும் எதிர்நோக்கிய வளர்ச்சி வாய்ப்புகள் தொடர்பாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் களஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.**

கொழும்பு பாதுக்கவில் அமைந்துள்ள ஹரித்த அலங்கார மீன் உற்பத்திப் பண்ணைக்குச் சென்ற அவர் அங்குள்ள கட்டமைப்பு மற்றும் அலங்காரமீன் உற்பத்தியைப் பார்வையிட்டார். அலங்கார மீன் உற்பத்தித் துறையைச் சார்ந்த தொழில்முனைவோர் மற்றும் துறைநிபுணர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

அலங்கார மீன் உற்பத்தித்துறை, நாட்டின் பொருளாதாரத்திற்குப் பிரதான பங்களிப்பை வழங்கக்கூடிய புதுமையான தொழிற்றுறையாகக் கருதப்படுகிறது. உலகளவில் அலங்கார மீன் சந்தைக்கு நிலவும் அதிகமான தேவை காரணமாக, இலங்கை அதில் பங்காற்றும் திறன் கொண்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இயற்கை வளங்களும் நீர்வளங்களும் பரவலாகக் காணப்படுவதால், அந்தப் பகுதிகளில் அலங்கார மீன் உற்பத்திப் பண்ணைகளை ஆரம்பிக்க மிகுந்த வாய்ப்பு இருக்கின்றது. இதற்கான அரசாங்க ஆதரவுகள், பயிற்சித் திட்டங்கள் போன்றவை வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். அதேநேரம், அலங்கார மீன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதித்துறையை தேசிய அளவில் மேம்படுத்தும் நோக்கில் ஒருங்கிணைந்த செயற்றிட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான ஆரம்பகட்ட ஆலோசனைகளும் இடம்பெற்றுள்ளன. (ச-26)

# ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சாதனையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ.4

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு அதிபர் ரி.லோகராஜா தலைமையில் கல்லூரி ஒரேற்றர் மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜெ.ஜெயச்சந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆர். ராஜசீலன், வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.செந்தில்குமரன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்டச் செயலக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் என்.தயாபரன், ஓய்வுபெற்ற பிரதி அதிபர் ஆர். ஜோர்ஜ், வவுனியா 'ஸ்போர்ட்ஸ் கோர்னர்' கடை உரிமையாளர் எஸ். ஸ்கந்தகுமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-25)

# புனித சாள்ஸ் மகாவித்தியாலய 150ஆம் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், நவ.4

யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் 150ஆம் ஆண்டு நிறைவு விழாவும், ஸ்தாபகர்தின நினைவுகூரலும் இன்று செவ்வாய்க்கிழமை காலை திருப்பலியைத் தொடர்ந்து நடைபெறவுள்ளன .

பாடசாலை அதிபர் கு.லெனின்குமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பாடசாலையின் பழையமாணவியும் யாழ். மாவட்டச் செயலகத்தின் முதன்மை முகாமைத்துவ உத்தியோகத்தருமாகிய திருமதி மெ.ய.சக்திஜீபன் கலந்துகொள்ளவுள்ளார்.

ஆரம்ப நிகழ்வாக பழையமாணவர்களான அருட்தந்தையர்களால் யாழ். மரியன்னை பேராலயத்தில் காலை 7.45 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெறும். (ச-25)



# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 42 பேர் தருமபுரத்தில் கைது!

கிளிநொச்சி, நவ.4

நீதிமன்றக் கட்டளைகளுக்குச் சமுகமளிக்காத 42 சந்தேகநபர்கள் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சிப் பொலிஸார் மற்றும் தருமப்புரம் பொலிஸார் நேற்று அதிகாலை மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த கிளிநொச்சிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-113)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ.4

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவு அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து 'சோழனை மடுவில் வீட்டிய படலம்' எனும் தலைப்பில் இளஞ்சைவப்புலவர் ச. நவநீதன் சொற்பொழிவாற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




மரநடுகை மாதம்

"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்டவேண்டும்."


– அலெக்சான்டர் சமித்–

## காவு வாங்கும் பகிடிவதை

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பீடத்தில் முதலாம் ஆண்டு மாணவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம், இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் இன்னும் அழிக்கப்படாமல் இருக்கும் பகிடிவதை என்ற நச்சுச்செடியின் வீரியத்தை மீண்டுமொருமுறை வெளிக்கொணர்ந்துள்ளது. திடீர் சுகவீனம் என ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்ட குறித்த இளைஞரின் மரணம் பின்னர் பகிடிவதையின் விளைவாகவே நிகழ்ந்தது என உறவினர்களால் ஆதாரங்களோடு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. பகிடிவதையால் காவுகொள்ளப்பட்ட இந்த மாணவனின் விருப்பமின்றி, பலவந்தமாக சிரேஷ்ட மாணவர்கள் மதுவை அளவுக்கதிமாகப் பருக்கியதாலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்பதே உறவினர்களின் குற்றச்சாட்டு. ஒருவேளை அவரின் சாவுக்கு மதுவை விட வேறு காரணங்கள் உடற்கூற்றுப்பரிசோதனையில் கண்டறியப்பட்டாலும்கூட, அந்த மாணவனுக்கு பகிடிவதையின் பேரால் மது புகட்டப்பட்டது என்பது உண்மையே. அதன்மூலம் இலங்கையில் உள்ள அத்தனை பல்கலைக்கழகங்களிலும் பகிடிவதை என்ற நச்சுச் செடி,அழிக்கவே முடியாத அரக்கனாக வியாபித்திருப்பதையும் உணரமுடிகின்றது.

பல்கலைக்கழகங்கள் அறிவை வளர்க்கும் தளங்களாக இருக்கவேண்டும். ஆனால் சில சிரேஷ்ட மாணவர்கள், தங்களை அதிகாரமிக்கவர்களாக - சக்திவாய்ந்தவர்களாகக் காட்டிக்கொள்ளும் நோக்கில், புதிய மாணவர்களை மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் துன்பத்துக்குள்ளாக்குகின்றனர். 'பகிடிவதை' என்ற பெயரில் நடக்கும் இத்தகைய செயல்கள் மாணவனொருவரின் சுய கௌரவத்தையும், மனநிலையையும் சிதைக்கும் குரூரமான நிகழ்வுகளாக மாறிவிட்டன. பல்கலைக்கழகங்களில் நடத்தப்படும் மதுவிருந்து, குழுமோதல், பலர் முன்னிலையில் அவமானப்படுத்தல், செய்யத்தகாத செயல்களைப் பலவந்தமாக பலர் முன்னிலையில் செய்ய வைத்தல், நிர்வாணமாக்கல், நிர்வாணப்படுத்தப்பட்ட புகுமுக மாணவர்களை வீடியோ எடுத்து சமூகவலைத்தளக் குழுமங்களில் பகிர்தல் போன்ற செயல்கள் கல்விச் சூழலைக் கொடூரமானவையாக- பூலோக நரகமாக-மாற்றுகின்றன. இத்தகைய சூழல் மாணவர்களின் உள நலத்தையும், கல்வியில் ஈடுபடும் திறனையும் பாதிக்கின் றன. பல்கலைக்கழகத்துக்கு புதிதாக நுழையும் மாண வர்கள் அச்சம், மனஅழுத்தம், தனிமை போன்ற உணர்வுகளுடன் வாழவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்படுகிறார்கள். சிலர் கல்வியை நிறுத்திவிடுகின்றனர் சிலர் கடுமையான மன அழுத்தத்தால் உயிரிழக்கின்றனர். அறிவை வளர்க்கவேண்டிய இடம், உயிரைக் கொல்லும் இடமாக மாறுவது எவ்வளவு துயரமானது!

பகிடிவதை என்ற நச்சுச்செடியை வேரோடு பிடுங்குவது அரசாங்கம், பல்கலைக்கழக நிர்வாகம், மானியங்கள் ஆணைக்குழு, மாணவர்கள் என்ற நான்கு தரப்புகளினதும் பொறுப்பாகும். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் பகிடிவதை எதிர்ப்புப் பிரிவுகள் சட்டரீதியான அதிகாரத்துடன் செயற்படவேண்டும். பகிடிவதை குறித்து முறைப்பாடு செய்யும் மாணவர்கள்மீது எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படாதவாறு பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். பகிடிவதை நிகழ்த்துவோருக்கு எதிராக கடுமையான ஒழுங்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவேண் டும். அதேசமயம், விழிப்புணர்வுநிகழ்ச்சிகள் மூலம் மாணவர்களில் மனிதநேயம் மற்றும் பரஸ்பர மரியாதையை ஊட்டவேண்டும். கல்வி என்பது அறிவு, ஒற்றுமை, மனி தாபிமானம் ஆகியவற்றின் வடிவமாக இருக்க வேண்டும். ஆனால் பகிடிவதை அவற்றை அழித்து, மாணவர் சமூகத்தை உடைந்த நம்பிக்கைகளின் பாதை' யில் இழுத்துச் செல்கிறது. எனவே, இன்னொரு உயிரை இழக்கும்முன், இந்நாட்டின் பல்கலைக்கழகங்கள் பகிடிவதை என்ற நச்சுச்செடியை வேரோடு பிடுங்கி, மாணவர்கள் பயமின்றி கற்கும் பாதுகாப்பான கல்விச் சூழலை உருவாக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.




## 250,000 வாகனங்களால் 63,000 கோடி வருமானம்

**கொழும்பு, நவ.4**

**இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் இலங்கைக்கு சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் சுங்கத் திணைக்களம் 63 ஆயிரம் கோடி ரூபா வருமானம் ஈட்டியுள்ளது என்று இலங்கைச் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

கடந்த ஆண்டின் முதல் 10 மாதங்களுடன் ஒப்பிடுகையில் இது ஆயிரம் வீதத்துக்கும் அதிகமான அதிகரிப்பாகும். இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் மட்டும் வாகன இறக்குமதிக்கு 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது. அதில் செப்ரெம்பர் மாதமே வாகன இறக்குமதிக்கு அதிகபட்சத்தொகை செலவிடப்பட்டுள்ளது என்று புதிய தரவுகள் காட்டுகின்றன.

செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் வாகன இறக்குமதிக்கு இலங்கை 286 மில்லியன் அமெரிக்க டொலரைச் செலவிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## அடையாள அட்டைகள் தடையற்ற விநியோகம்

கொழும்பு, நவ.4

தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கை தடையின்றித் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது என்று ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது 15 இலட்சம் விண்ணப்பங்கள் தேசிய அடையாளஅட்டைபெறுவதற்காகக் குவிந்துள்ளன. இந்த அடையாள அட்டைகளைத் திட்டமிட்ட அடிப்படையில் அச்சிட்டு விநியோகிக்கும் பணிதற்போது நடைபெற்று வருகிறது. தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்காகத் தினந்தோறும் திணைக்களத்துக்குவரும் ஏனைய பொது விண்ணப்பதாரிகளுக்கும்தடையின்றித் தொடர்ச்சியாக தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி!

கொழும்பு.நவ.4

ஹொரணை சிரில்டன் வத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். தனிப்பட்ட தகராறு காரணமாகத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

### சுற்றுச்சூழலுக்குச் சேதமா?

## 1995க்கு அறிவிக்கலாம்

கொழும்பு.நவ.4

நாட்டில் வன அமைப்பு மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காகப் புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1995 என்ற புதிய தொலைபேசி இலக்கத்தின் மூலம் தகவல்களை வழங்கமுடியும் எனச் சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது. வன மற்றும் வன விலங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதையும், வனக்குற்றங்களைத்தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## ஆயுள்வேத சேவைகளுக்கு 303 பட்டதாரிகள் நியமனம்

கொழும்பு, நவ.4

நாட்டின் உள்நாட்டு ஆயுள்வேத வைத்தியத்துறையை வலுப்படுத்தும்நோக்கில், சமூக சுகாதார மருத்துவ அதிகாரிகள் உட்பட 303 பட்டதாரிகள் இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஆயுள்வேத சேவைகளின் எதிர்கால செயற்றிறனை மேம்படுத்துதல், நோயாளர் பராமரிப்பின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவையில் முதன்மைத்தர வைத்திய அதிகாரி பதவிகளுக்கான தற்போதைய வெற்றிடங்களை நிவர்த்திசெய்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை

புதன்கிழமை - ஐப்பசி 19

05.11.2025

சுபநேரம் : 04.34 - 06.04

ராகுகாலம் : 12.04 - 01.34




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாமல் ராஜபக்சவே அடுத்த ஜனாதிபதி

## பெரமுன நம்பிக்கை

கொழும்பு, நவ.4
நாமல் ராஜபக்ச நாட்டில் சிறந்த இளம் தலைவராகச் செயற்பட்டுவருகின்றார். அவர் தான் அடுத்த ஜனாதிபதி என்று நாட்டு மக்களே கூற ஆரம்பித்துள்ளனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ச களமிறங்கியதால் தான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி பாதுகாக்கப்பட்டது. தோல்வி உறுதி என்பது தெரிந்தும், களமிறங்க வேண்டாம், உங்கள் அரசியல் எதிர்காலம் நாசமாகிவிடும் என நாமலிடம் பல உறுப்பினர்கள் கூறினர். அவரது குடும்ப உறுப்பினர்களும் அதை வலியுறுத்தினர்.

ஆனால் நெருக்கடியான சூழ்நிலையிலும் சவாலை ஏற்ற இளம் தலைவர் அவர். அதுமட்டுமல்ல நாடாளுமன்றிலும் துணிவுடன் செயற்பட்டு வருகின்றார். ஜனாதிபதித் தேர்தலில் 2.5 சதவீத வாக்குகளே கிடைத்தன. ஆனால் பொதுத்தேர்தலில் அது 10 சதவீதமாக அதிகரித்தது. நாமல் அன்று வழங்கிய உத்வேகமே இதற்குக் காரணம். நாமல் ராஜபக்சதான் அடுத்த ஜனாதிபதியென நாட்டுமக்கள் கூறிவருகின்றனர். அது உண்மை. அடுத்த தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடிப்போம்- என்றார். (க-44)


### தவறிவிடப்பட்டது

இல.09, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த பரமானந்தம் கருணானந்தம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, பருத்தித்துறை கிராமக்கோடு பகுதியில் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 3272 384**

(CS 30669) A


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11 . 06 . 1968

விண்ணில் 15 . 11 . 2024



**அமரர் அந்தோனிமுத்து றொபின்சன்**

(ஓய்வுநிலை மதுவரி உத்தியோகத்தர் - சார்ஜன் (Sergeant))

எமது அன்புத் தெய்வம் அந்தோனிமுத்து றொபின்சன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி இன்று (04.11.2025) செவ்வாய்க்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் தங்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு பேரன்போடு வேண்டுகின்றோம்.

நம்மையெல்லாம் நலிவில்லாமல்
வாழவைத்த - எங்கள் ஐயாவே !

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்


தகவல்:
குடும்பத்தினர்

(CS 59803) E

### 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 11 . 1924

மறைவு 25 . 10 . 2007



**அமரர் வல்லிபுரம் மகேந்திரராஜா J.P**

(இளைப்பாறிய பிரதம தபால் அதிபர்)

சதுர்த்தசி திதி 04.11.2025

கோடி உறவுகள் அருகில் இருந்தாலும்
அப்பாவின் அன்பை மிஞ்சிய உறவு இவ்வுலகில் இல்லை

மேதேஸ் லேன்,
மானிப்பாய்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 13 . 01 . 1930

மறைவு 05 . 10 . 2025



**அமரர் பொன்னன் நாகம்மா**

நூற்றாண்டு காலம் எமக்காக
உழைத்த உத்தமியே,
எம்முயிர் உள்ளவரை
உன் நினைவுகள் அழியாது.

எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுத் துயரில் பங்கேற்று ஆறுதல் கூறி எல்லா வழிகளிலும் உதவிகள் வழங்கி உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் எமக்கு ஆறுதல் கூறிய எம் இனிய உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (04.11.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தேவராசா பந்தல் சேவை,
வளர்மதி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

பிள்ளைகள்
+16475887491 (கனடா)
077 2544727 (இலங்கை)

(CS 59310) A

### மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 03 . 1940

மறைவு 30 . 10 . 2025



**சற்குணம் மஹேசவேலு**

மீசாலையை பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சற்குணம் மஹேசவேலு அவர்கள் கடந்த 30/10/2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மஹேசவேலு வேலுப்பிள்ளை (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், வசந்தன் (அமெரிக்கா), கலைரஞ்சன் (லண்டன்), முகுந்தன் (கனடா), தர்ஷினி (லண்டன்), ஹேமலதா (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா - தம்பிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகளும் அவிக்னா, அஷ்வின் (அமெரிக்கா), கீர்த்திகா, ஹரிப்பிரியா (லண்டன்), அக்ஷினி, அபினன் (கனடா) விஷாகன் (லண்டன்), அபினவ் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு பேத்தியும், பத்மாவதி, ரஞ்சிதமலர், பிரபாஜினி, அகிலன், சசிதரன் ஆகியோரின் அருமை மாமியாரும், காலம் சென்றவர்களான மகேஸ்வரி, கணேசபிள்ளை, சோமசுந்தரம் மற்றும் பரமேஸ்வரி, பத்மநாதன், புவனேஸ்வரி, கமலேஸ்வரி, தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் பங்களா வீதி, மீசாலை மேற்கு, மீசாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று 04.11.2025 (செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பங்களா வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு: வசந்தன் மஹேசவேலு
077 761 0439, +44 7598912198 (WhatsApp)

(CS 59800) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வழிகாட்டல் செயலமர்வு

கொடிகாமம், நவ.4

உள்ளூராட்சிமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியம் மற்றும் குடிசார் அமைப்புகளின் நிறுவனமயமாக்கல் தொடர்பான அரைநாள் வழிகாட்டல் செயலமர்வு யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்தநிகழ்வு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியனுசரணையுடன் கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிறிஜ் திட்டத்தினூடாக இடம்பெற்றது.

மாவட்ட உள்ளூராட்சிமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தின் பார்வை மற்றும் இலக்கு, செயற்பாடு, பங்கு மற்றும் பொறுப்புகள் மற்றும் குடிசார் அமைப்பின் நிர்வாகியாக சீரமைப்பு மற்றும் பொறுப்புகள், கடமைகள் தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டது.

முன்னாள் பெண் உறுப்பினர்களின் அனுபவப் பகிர்வு, கூட்டுமுயற்சிகள்மூலம் அடையப்பட்ட முக்கியமான சாதனைகள், மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தை நிறுவனம் மாக்குவதற்கான வழிகாட்டுதல்கள் பற்றிய விளக்கக் காட்சி, உள்ளூராட்சியில் பெண்களின் ஒருங்கிணைந்த குரலின் முக்கியத்துவம், யாழ். மாவட்ட உள்ளூராட்சிமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியம் மற்றும் யாழ்.மாவட்ட குடிசார் அமைப்பின் சம்மேளனம் ஆகியவற்றால் உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்டச் செயலகம், மாவட்டம் மற்றும் மாகாணமட்டங்களின் நடவடிக்கைகளை அடையாளம் காணுதல் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. (எ-41-159)

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் வித்தியாலய அரங்கில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இவ்வோன் லெனின் லியனும், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் கலந்துகொண்டனர். (எ-41-9)







விசேட மருத்துவ நிபுணர்களின் பங்கேற்புடன் அச்சுவேலி மத்திய சனசமூக நிலையத்தில் இலவச மருத்துவ முகாம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. யாழ்.மருத்துவச் சங்கம், யாழ்.மருத்துவப் பிரதிநிதிகள் சங்கம் மற்றும் அச்சுவேலி மத்திய சனசமூக நிலையம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் இந்த முகாம் நடைபெற்றது. முகாமில் மருத்துவ ஆலோசகர்கள், குழந்தை மருத்துவ நிபுணர்கள், கண் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள், தோல் மருத்துவ நிபுணர்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (எ-41-20)



# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.4

பாலசுப்பிரமணியம் துவாரகன் எழுதிய யாழ்ப்பாண மருத்துவ வரலாறு நூல் வெளியீட்டு விழா யாழ்.போதனா மருத்துவமனை மன்றப் பணிப்பாளர் சபை உறுப்பினர் இ.பேரின்பநாயகம் தலைமையில் யாழ்.பொதுநூலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபையின் ஓய்வுநிலைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆசியுரையையும், யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி நூல் அறிமுகவுரையையும், அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் சிறப்புரையையும், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் நூல் மதிப்பீட்டுரையையும், நூலாசிரியர் ஏற்புரையையும் வழங்கினர். (எ-41-66)



# ஆண்டு விழாவும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம் நவ.4

இலங்கை போக்குவரத்துச்சபையின் யாழ்.சாலை ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் ஆண்டு விழாவும் கல்விசார் கௌரவிப்பும் கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ்.சாலை அலுவலகத்தின் செயலாற்றுகைப் பகுதி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் பிரதம விருந்தினராகவும், இலங்கை போக்குவரத்துச்சபையின் வடபிராந்திய முகாமையாளர் கே.கேதீசன் சிறப்பு விருந்தினராகவும், சாலை முன்னாள் பணியாளர்களான கந்தையா துரைசிங்கம், மாணிக்கம் சற்குணம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் 7ஏ தரச் சித்திக்கு மேல் பெற்றவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவானவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர் ஆகியோர் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். (எ-41-66,40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆற்றுச்சருக்கைகள் மக்கள் பாவனைக்கு

வவுனியா,நவ.4

வவுனியா மாவட்டத்தில் மழை காலங்களில் மக்கள் பயணிக்க முடியாதநிலையில் காணப்பட்ட பிரமனாலன்குளம் - பரப்புக்கடந்தான் வீதியில் இரண்டு ஆற்றுச்சருக்கைகள் , வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி 45.49 மில்லியன் ரூபாவில் இந்த இரண்டு ஆற்றுச்சருக்கைகளும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வவுனியா மாவட்ட அலுவலகத்தின் மேற்பார்வையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் திருமதி வி.அபிராமி, வவுனியா மாவட்ட பிரதம பொறியியலாளர் கே.கௌசிகன், நிறைவேற்றுப் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர், கிராம அலுவலர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-113)





காங்கேசன்துறை உதயசூரியன் சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில், மாணவர்களுக்கிடையிலான வாசிப்புப் போட்டி நிலையத்தின் தலைவர் பூ.பிரபாகர் தலைமையில் சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குச் சிறப்புப் பரிசில்களும், போட்டியில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-25, 100)

சிறுவர், பெண்கள் விவகார அமைச்சின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் பால்நிலை சார் வன்முறைகளால் பாதிப்புக்குள்ளான சேவை நாடிகளுக்கான அவசர சேவை வழங்குதல் தொடர்பான பயிற்சிப்பட்டறை மாவட்ட மேலதிக செயலர் கே. சிவகரனின் தலைமையில் மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச)



இந்த வருடம் பரீட்சைக்குத் தோற்றவுள்ள உயர்தர மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடச் செயலமர்வு கடந்த புதன்கிழமை வெண்கரம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் பூநகரிப் பிரதேசசபை நூலகத்தின் அனுசரணையில் நூலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. செயலமர்வில் வெண்கரம் அறக்கட்டளையின் பிரதான செயற்பாட்டாளர் திருமதி சு.சண்முகேந்திரன் வளவாளராகக் கலந்து கொண்டார். (ச-66)

கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் கிளையால் ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் குறைநிவர்த்தி நடமாடும் சேவை பிரதேச செயலாளர் இ. விஜயகுமார் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச)











பச்சிலைப்பள்ளிப் பிரதேச சமுர்த்தி வங்கி மற்றும் சமுர்த்திச் சங்கம் ஆகியன 2024ஆம் ஆண்டு சர்வதேச புகைத்தல் எதிர்ப்புதின சேகரிப்பு வேலைத்திட்டத்தில் வெற்றிபெற்றமைக்காக கடந்த ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்ற ஹரசர நிகழ்வில் விருது, பாராட்டுச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. (எ-41-9)



கிளாலியில் தற்காலிக வீடுகளில் வசிக்கும் 29 குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன. புலம்பெயர் உறவுகளின் ஏற்பாட்டில் இவை வழங்கப்பட்டுள்ளன. (எ-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பிரதீபா விருதுக்கான போட்டிகளில்

# தென்மராட்சி கலாசார நிலையம் 3 விருதுகளைப் பெற்றுச் சாதனை



சாவகச்சேரி, நவ.4

புத்தசாசன சமய விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தேசிய ரீதியில் நடத்திய பிரதீபா விருதுக்கான போட்டியில் தேசியமட்டத்தில் தென்மராட்சி கலாசார மத்திய நிலையம் 3 விருதுகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது. ஆரம்பப் பிரிவு குழுப் புத்தாக்கப் பாடல் போட்டியில் முதலாம் இடத்தையும், கனிஷ்ட பிரிவுக் குழு கிராமிய பாடல் போட்டியில் முதலாம் இடத்தையும், தில்லானா நடனப் போட்டியில் முதலாம் இடத்தையுமாக 3 விருதுகளைப் பெற்றுள்ளது. (எ-25, 9)



தென்மராட்சிப் பிரதேச செயலக கிராமமட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் காணிக்கிளை உத்தியோகத்தர்களுக்கான கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக தரவு சேகரித்து வரைபடம் தயாரித்தல் தொடர்பான பயிற்சி நெறி பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பிரதேச செயலர் எவ். சீ. சத்தியசோதி தலைமையில் நடைபெற்ற பயிற்சிநெறியில் வளவாளராக காணிப் பயன்பாட்டு அலுவலர் ந. திவாகரன் கலந்துகொண்டார். (எ-25,9)

# பொலிஸாருக்குச் செயலமர்வு


## வவுனியாவில்

வவுனியா, நவ.4

போக்குவரத்துக் குற்றங்களுக்காக விதிக்கப்படும், தண்டப்பணத்தை ஒன்லைனில் செலுத்துவது தொடர்பாக, பொலிஸாருக்கான செயலமர்வு வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. பொலிஸாரால் விதிக்கப்படும் தண்டப்பணத்தை, அவ்விடத்திலேயே ஒன்லைன்மூலம், செலுத்தும் நடைமுறை நாடுபூராகவும் நடைமுறைக்கு வந்துள்ளது. அதனடிப்படையில், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் இதனை நடைமுறைப்படுத்துவதற்குப், பொலிஸாருக்கு தெளிவூட்டல் வழங்கப்பட்டது. (க-110)



அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 10 . 06 . 1952

மறைவு 06 . 09 . 2025

கடந்த (06.09.2025) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் தில்லையம்பலம் யோகராஜா

திதி : நிர்ணயப்பா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.11.2025) செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகளும் முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். எதிர்வரும் (06.11.2025) வியாழக்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிள்றோம்.

இல.19, உப்புக்குளம் வீதி,
கொழும்புத்துறை.

குடும்பத்தினர்
077 038 8682



கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நூறு மரங்கள் நடுதல் நிகழ்வு பாடசாலை மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் சின்னத்தம்பி ஞாபகமாக அவரது பேரன் யோகலிங்கம் புஸ்பராஜா என்பவரின் நிதிப் பங்களிப்பில் இந்த மரங்கள் நடுகை செய்யப்பட்டன. (ச-25, 213)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுவாக்கெடுப்புக் கோரி உலகெங்கும் பொங்குதமிழ்!

## சிவாஜிலிங்கம் அழைப்பு!

**யாழ்ப்பாணம், நவ.4**

**பொதுவாக்கெடுப்பின் ஊடாகவே எமக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்ளமுடியும். பொதுவாக்கெடுப்புக் கோரிக்கை தொடர்பில் அனைத்துலகக் கவனத்தை ஈர்த்து, அழுத்தங்களை ஏற்படுத்தும்வகையில் உலகெங்கும் பொங்குதமிழ் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். வடமராட்சியில் கடந்த சனிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. ஐ.நா. உட்பட சர்வதேச அமைப்புகள் அரசியல் தீர்வு விடயங்களுக்கு குரல் கொடுத்தாலும் தீர்வு கிட்ட வில்லை. அவுஸ்திரேலியா மெல்பேர்ண் நகரில் எதிர்வரும் 9ஆம் திகதி பொதுவாக்கெடுப்புக் கோரிக்கையை வலியுறுத்தி பொங்குதமிழ் நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது. மெல்பேர்ண் நகரைத் தொடர்ந்து தமிழகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் தொடர்ந்து பொங்குதமிழ் நிகழ்வுகளை முன்னெடுக்கவேண்டும்.

இலங்கைக்குள் எந்தவொரு தீர்வும் சாத்தியமில்லை என்பது உறுதியான நிலையில், பொதுவாக்கெடுப்பு ஒன்றின்மூலமே எமக்கான அரசியல் தீர்வை அடையமுடியும். பொதுவாக்கெடுப்புக் கோரிக்கை தொடர்பில் அனைத்துலகக் கவனத்தை ஈர்த்து அழுத்தங்களைக் கொடுக்கும் வகையில், உலகின் சகல நகரங்களிலும் பொங்குதமிழ் நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும்-என்றார். (எ-க-100)

# போராட்டத்துக்கு ஆட்சேர்க்கும் சமார எம்.பி.

நுகேகொடையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டம் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவுசெய்வதற்கல்ல. ஆகையால் அரசியல் பேதங்களை மறந்து அனைத்து எதிர்க்கட்சிகளும் அணிதிரளவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சமார சம்பத் தஸநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நுகேகொடைப் போராட்டத்தில் பங்கேற்பதில்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ள நிலையில் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நுகேகொடைப் போராட்டமானது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிரானது. அதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் ஆதரவு வழங்கவேண்டும். 2029ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து இந்தப் போராட்டத்தைத் தவறவிடக்கூடாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-25)

# துப்பாக்கி கோரும் 20 எம்.பி.க்கள்

கொழும்பு,நவ.4

பாதுகாப்பு நோக்கங்களுக்காகக் கைத்துப்பாக்கிகளை வழங்க வேண்டும் என்று 20க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்குக் கடிதங்களை சமர்ப்பித்துள்ளனர்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் முதலில் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். அப்போதுதான் அவர்கள் தங்கள் அரசியல் நடவடிக்கைகளை எந்த வித இடையூறும் இல்லாமல் பாதுகாப்பான சூழலில் மேற்கொள்ள முடியும் என்றும் அவர்கள்

சுட்டிக்காட்டியுள்ளனர். பாதுகாப்புக் கோரிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான புலனாய்வு அறிக்கைகள் மற்றும் பொதுவான அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கைகள் கோரப்பட்டு, தேவையான நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகர் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார். (ச)


## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 11 . 1946



மறைவு 03 . 11 . 2025

### சுப்பிரமணியம் திருஞானசம்பந்தர்

(ஓய்வு பெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர், வீதி அதிகாரசபை)

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும், 211/30 கோயில் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திருஞானசம்பந்தர் அவர்கள் நேற்று (03.11.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாக்கியம் தம்பதியரின் மருமகனும், செல்வாவின் அன்புக் கணவரும், துஷாந், துஷாந்தினி, துளசி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலச்சந்திரன், ராஜசுந்தரம் (ராஜன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் ஜெகதீசன் (சோதி) ஆகியோரின் மைத்துனரும், பிர்த்தி, டிபிக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும், பிரசாளினி, நீபதரன், வரயாழினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

211/30 கோயில் வீதி,
நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்
077 451 0179 - மகள் (துளசி)
077 242 7902 - மைத்துனர் (சோதி)

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் தங்கம்மா
(காரைநகர்)

காரைநகர் களபூமி விளானையை பிறப்பிடமாகவும் இடைப்பிட்டி சுப்பிரமணியம் வீதி, மற்றும் நெடுங்கேணியை வதிவிடமாகவும் (திருப்பதி ஸ்ரோர்ஸ்) தற்போது இலக்கம் 414/54 உதயர் மில் வீதி வேப்பங்குளத்தில் வசித்து வந்தவருமான சுப்பிரமணியம் தங்கம்மா அவர்கள் நேற்று (03.11.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - காசுபதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (திருப்பதி ஸ்ரோர்ஸ் நெடுங்கேணி) அன்பு மனைவியும், சிவலிங்கம் (லண்டன்), ஸ்ரீபாலன் (கனடா), ஸ்ரீவாணி (துவசியாகுளம் அ.த.க பாடசாலை ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியநாதன் (ஆசிரிய ஆலோசகர் வலயக்கல்வி அலுவலகம் வவுனியா வடக்கு), கௌசலா (லண்டன்), தனுஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருஷாந் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), வித்தகன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), மதுரா, மிதுரா, வேணுயன், திவாகினி, தமிழேந்தி, தனுஷ் ஆகியோரின் அன்பு பேத்தியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சதாசிவம், சோமசுந்தரம், இராசம்மா, சுந்தரம்மா, நாகம்மா மற்றும் இரங்கம்மா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் மகேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2025) செவ்வாய்க்கிழமை இலக்கம் 414/54 வேப்பங்குளம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

414/54 வேப்பங்குளம்,
வவுனியா.
0779200018

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 30672) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூண் இடிந்து வீழ்ந்து சிப்பாய் ஒருவர் பலி!

## மேலும் இருவர் படுகாயம் முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு, நவ. 4
முல்லைத்தீவு கேப்பாபிலவு படைமுகாமில் கைவிடப்பட்ட பகுதியொன்றின் தூண் இடிந்து வீழ்ந்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

59ஆவது படைத் தலைமையத்தில் கைவிடப்பட்ட பகுதியொன்றிலேயே நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. படுகாய மடைந்த மூன்று சிப்பாய்களும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே, அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிப்பாய் 34 வயதுடையவர். அவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. ஏனைய இருவரும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-ம-19)

### செல்வம்...

ளது. வவுனியா - புளியங்குளம் பகுதியில் பயணித்தபோதே இந்தத் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, வாகனச் சாரதியும், அந்தப் பகுதியில் நின்றவர்களும் துரிதமாகச் செயற்பட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின்போது வாகனத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பயணிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

### ஒருங்கிணைப்புத்...

தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா ஏற்கனவே உடுவில், தெல்லிப்பழை, சங்கானை, மற்றும் கரவெட்டிப் பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது கரவெட்டிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினரான ஜெ.ரஜீவன் நியமிக்கப்பட்டுள்ளார். ஆதலால், இனிவரும் காலங்களில் உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக ஸ்ரீபவானந்தராஜா செயற்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

### தமிழ்மக்கள்...

மான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

கட்சியின் பெயர்ப் பலகையைத் தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினரும், யாழ்.மாநகரசபையின் முன்னாள் முதல்வருமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் கார்த்திகை மாதத்தை முன்னிட்டு மாவீரர்கள் நினைவாக ஈகச்சுடர் ஏற்றப்பட்டு ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வில் தமிழ்மக்கள் கூட்டணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சியின் மகளிர் அணியினர், கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-ம-66-26)

### இளைஞர்களை...

தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சந்தேநபர்களிடம் இருந்து 3 ஆயிரத்து 200 போதை மாத்திரைகள் மீட்கப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. சந்தேகநபர்களை நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தும் நகர்வுகளும் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

### 239 என்புத்...

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. செம்மணிப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட 240 என்புத்தொகுதிகளில், 239 என்புத்தொகுதிகள் இரண்டு கட்ட அகழ்வுப் பணிகளின் போது மீட்கப்பட்டது. அவை நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றின் மீதான ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கான பிரத்தியேக பட்ஜெட் சட்டமருத்துவ அதிகாரியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த பட்ஜெட்டுக்கு ஒப்புதல் கிடைக்கப்பட்டுநிதி ஒதுக்கப்பட்டதும், மேலதிக நடவடிக்கைகள் இடம்பெறும் எனத் தெரியவருகின்றது. (அ-ம-26)

### கள்ளமண்...

காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

மணல் கடத்தல் இடம்பெறுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் மாலை தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து, குடவத்தை பகுதியில் மறைந்திருந்த பொலிஸார் மணல் ஏற்றியவாறு பயணித்த வாகனத்தை இடைமறித்துள்ளனர். எனினும், வாகனம் நிற்காமல் சென்றுள்ளது. இதையடுத்து, பொலிஸாரால் வாகனத்துக்கு ஆணிக் கட்டைகளும் வீசப்பட்டுள்ளன. அதன் பின்னரும் வாகனம் நிற்காமல் சென்ற நிலையிலேயே, அந்த வாகனத்தின் மீது பொலிஸாரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது, மணல் கடத்தலில் ஈடுபட்ட ஒருவரின் கால் பகுதியில் தோட்டா பாய்ந்த நிலையில், அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சிலர் தப்பிச்சென்றிருந்த நிலையில், அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-100)

### ஐஸ்...

ளனர். ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தமை தொடர்பில், யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த ஆறு பேரில் ஒருவர், வழிப்பறி மற்றும் கொள்ளைகளுடன் மன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர் என்பதையும் பொலிஸார் கண்டறிந்துள்ளனர். இதையடுத்து, அந்த நபரிடம் உடைமையில் இருந்து கொள்ளையிடப்பட்ட தங்கச் சங்கிலி மற்றும் கொள்ளைக்குப் பயன்படுத்திய மோட்டார்சைக்கிள்கள் என்பவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-20-26)

### ஹெரோய்னுடன்...

வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். கொக்குவில் - குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் பெண்ணொருவர் ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபடுகின்றார் என்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளுக்கு அமையவே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார். அவரின் உடைமையில் இருந்து 2 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-20-26-23)

### இந்திய...

நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் உள்ளதாவது:

இலங்கைக் கடற்படையால் தொடர்ச்சியாக தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அத்துடன் அவர்களின் மீன்பிடி உபகரணங்களும் அரசுடமையாக்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக இன்றும் (நேற்றும்) 31 மீனவர்கள் கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் இந்திய மத்திய அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றுள்ளது. (அ-ம)

### இந்திய மீனவர்கள்...

3 படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், அனைவரையும் எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-66-26-100-23-20)

### செம்மணியில்...

ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து காலணி ஒன்று மீட்கப்பட்டது. அதில் 39 ரூபா 90 சதம் என விலை காணப்பட்டது. அதன் அடிப்படையில் குறித்த காலணி நிறுவனத்திடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அந்தக் காலணி 1985ஆம் ஆண்டு தொடக்கம் 1995ஆம் ஆண்டு காலப் பகுதியில் விற்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. எனவே, குறித்த காலணி 1995ஆம் ஆண்டுக்கு முற்பட்டது என நம்பப்படுகின்றது - என்றார். (அ-ம-26)

### மூன்றாம்கட்ட...

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போது, புதைகுழிப் பகுதிக்கு நேரில் சென்று அங்கு ஆய்வுப்பணிகளை முன்னெடுத்து, அதன் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிப்பது எனத் திட்டமிடப்பட்டது. இதன்படி, நீதவான் எஸ்.லெனின்குமார், சட்டமருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், சட்டத்தரணிகளான நிரஞ்சன், ஞா.ரஜித்தா உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் புதைகுழிப் பகுதியை நேரில் சென்று பார்வையிட்டனர்.

கடந்த சில வாரங்களாக பெய்த தொடர் மழை காரணமாக, புதைகுழிக்குள்ளும் அதற்கு அண்டிய பகுதிகளிலும் மழைநீர் தேங்கி நிற்பதால் தற்போது ஆய்வுப் பணிகளை முன்னெடுப்பது பொருத்தமாக இருக்காது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆதலால், 2026ஆம் ஆண்டிலேயே அடுத்த கட்ட ஆய்வுப் பணிகளை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, எதிர்வரும் ஜனவரி மாதம் 19ஆம் திகதி மீண்டும் அகழ்வுத் தளத்துக்குப் பயணம் மேற்கொள்வது என்றும், அன்றைய நிலைவரத்தின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஊரெழு கணேச வித்தியாசாலையின் புத்தகக் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ச)




சர்வதேச வறுமை ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு, தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அலகினரால் இடைக்குறிச்சி கிராமப் பிரிவு பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை சத்துணவு வழங்கிவைக்கப்பட்டது. (ச-25,9)




## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.4

யாழ்.கட்டுடை சைவ வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலையின் அதிபர் திருமதி செல்வமகள் மோகனதாஸ் தலைமையில் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழையமாணவரும் கல்வியியற்கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளருமான ஞானமணி இரட்னசிங்கம், ஏனைய விருந்தினர்களாக கல்வியியலாளர்கள், பாடசாலையின் நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41)





சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் சஞ்சிகை 334 ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்றது. (ச-66)



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் 'பாரம்பரிய உணவுக் கலாசாரம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளில் மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வு நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் நெடுந்தீவுப் பிரதேச ஆயுள்வேத வைத்திய அதிகாரி பெரோன் வளவாளராக கலந்துகொண்டார். (ச)



வேலணைப் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு அலகினால் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தரால் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. (ச-25,9)





இலங்கை பெண்கள் பணியகத்தின் அனுசரணையுடன் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் வருமான வழிகாட்டல் பயிற்சிநெறி நெடுந்தீவுப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.வளவாளராக நல்லூர்ப் பிரதேச செயலக விஞ்ஞானத் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் கே.பரணிதரன் கலந்துகொண்டார். (ச)

அங்கர் பாதுகாப்புச் சேவை
பாதுகாப்பு
உத்தியோகத்தர்கள்
தேவை.
தொடர்புகளுக்கு:
077 539 6350
(CS/59498)J-1

## பரிசளிப்பு விழா

மன்னார் இந்துசமய வளர்ச்சிச் சங்கம் வருடந்தோறும் மன்னார் பாடசாலை மாணவர்களிடையே நடத்தும் சமய அறிவுப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பணப்பரிசில்களையும் வெற்றிச்சான்றிதழ்களையும் வழங்கிவைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ச-41-60)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org